1981 மார்ச் 26]

முடியாது. அவர்களுடைய தொழிலே சொல்லித் தருகின்ற தொழிலாக இருப்பதால், 50 சதவீதம் மதிப்பெண்கள் பெற வேண்டும் என்று முன்னாலேயே வைத்திருக்கிறார்கள். நாமும் அதையே பின்பற்றி வருகிறோம்.

திரு. பா. ரா. தாமஸ : பொதுவாக இன்று கல்விக் கூடங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் செமஸ்டர் முறை பின்பற்றப்படுகிறது. மூன்று மணி நேரம் தேர்வு எழுதும் நிலை இருக்கிறது. முதலாண்டில் சில பாடங்களிலும், இரண்டாம் ஆண்டில் சில பாடங்களிலும் தேர்வு எழுதுகிறார்கள். அது போலவே இதிலும் தேர்வு முறையை மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்லூரிகளிலே செமஸ்டர் முறை இருக்கிறது. அதற்குக் கீழே இருக்கின்ற பள்ளிகளிலே அது போன்ற செமஸ்டர் முறையைப் புகுத்துவதுபற்றி அரசு எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை.

முறைசாராக் கல்வி

*170 வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முறைசாராக் கல்விக்காக, மத்திய அரசு 1977-78, 1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளில் மாநில அரசுக்கு எவ்வளவு நிதி உதவி செய்தது ?

(இ) 15—6—1980 நாளன்றுள்ளபடி, முறைசாராக் கல்வி நிலையங்கள் தமிழ்நாட்டில் எத்தனை உள்ளன ?

(உ) எத்தனை மாணவர்கள் அங்கு பயில்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) முறைசாராக் கல்விக்காக மைய அரசு 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 10,12,200-ம், 1978-79 ஆம் ஆண்டில் ரூ. 4,22,913-ம் 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 70,03,000-ம் இம்மாநில அரசுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது.

(இ) 9,805 நிலையங்கள்.

(உ) 2,86,011 மாணவர்கள் பயில்கின்றனர்.

[1981 மார்ச் 26

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, இந்த 9,805 கல்வி நிலையங்களில் கல்வித் துறையே முன்னின்று நடத்தும் நிலையங்கள் எத்தனை ? வாலன்டரி ஏஜென்சிஸ் என்று சொல்லப்படும் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படும் நிலையங்கள் எத்தனை ? பயில்கின்ற மாணவர்களில் எத்தனை பேர் ஆண்கள், எத்தனை பேர் பெண்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வயதுவந்தோர் கல்வி மையங்களைப்பற்றிச் சொல்கிறார் என்று கருதுகிறேன். அதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும். இருக்கின்ற விவரங் களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மைய அரசு நிதியுதவியுடன் தொண்டு நிலையங்கள் மூலமாக 1,414 மையங்களும், நேரு இளைஞர் மையங்கள் வாயிலாக 218 மையங்களும், பல்கலைக் கழக மானியக் குழுவின் நிதியுதவியுடன் கல்லூரிகளின் வாயிலாக 622 மையங்களும் நடத்தப்படுகின்றன. இம்மையங்கள் பயில்வோருக்குத் தேவையான பாடப் புத்தகங்களையும், எழுதுகோல்களையும், மற்றும் பலகைகளையும் இலவசமாக வழங்குகின்றன. இந்த மையங்கள் அரசு சார்பாக இருக்கின்ற மையங்கள். தனிப்பட்ட தொண்டு நிலையங்களால் நடத்தப்படும் நிலையங்கள் அல்ல.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்த மையங்களிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் பட்டத் தகுதி படைத்தவர்கள் என்று நினைக்கிறேன். பத்து மாதங்களுக்குத்தான் அவர்கள் வேலையில் இருப்பார்கள் என்ற பாதுகாப்பு இல்லாத நிலை இருப்பதாகக் கூறப்படுகிறது. அது உண்மைதானா ? அப்படியென்றால் அவர்களை நிரந்தர அமைப்பிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களாக மாற்றியமைத்து, குறைந்தபட்ச ஊதியத்தை அவர்களுக்கு நிர்ணயிக்கக் கூடிய கருத்தையும் அரசு ஆய்வு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மைய அரசின் நிதி உதவியோடு நாம் நடத்துகிற நிலையங்களில் மைய அரசின் உதவியைக் கொண்டுதான் நடத்த வேண்டுமென்ற நிலை இருப்பதால், ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், இந்த நிலைமையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க விரும்புகிறது. எழுத்தறிவு இல்லாதவர்கள், பள்ளிக்குச் செல்லாத 6 முதல் 17 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஆகிய இரு சாராருக்கும் முறைசாராக் கல்வித் திட்டம், வயது வந்தோர் கல்வித் திட்டம் ஆகியவை தொடர்ந்து நடைபெற்று எல்லோருக்கும் கல்வி பெறுகின்ற வாய்ப்பைத் தர வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை. ஆகவே இவர்களுக்குப் பாதுகாப்புத் தரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 மார்ச் 26]

திரு. பா. ரா. தாமஸ் : பல்கலைக் கழகங்களிலே அஞ்சல்வழிக் கல்வி இன்று நடத்தப்படுகிறது. முறைசாராக் கல்வியும் இந்த முறையில் நடத்தப் படுகிறதா? இந்த முறையைக் காட்டி சில மாநிலங்கள் அதிக நிதி ஒதுக்கீட்டைப் பெறுவதாகக் கூறுகிறார்கள். நமது மாநிலத்தில் இத்தகைய முறை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அஞ்சல் வழிக் கல்வி என்பது இதிலே வருகிறது என்று தெரிகிறது. ஓப்பன் யூனிவர்சிட்டி என்பது முறைசாராக் கல்வி சார்புடையதாக இருக்கிறது. அது பற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேட்டால் தரப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா 169-க்கான மூல வினாவில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள், தான் எஸ்.எஸ்.எல்.சி. என்று கொடுத்திருந்ததாகவும், அது தவறாக வந்திருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார். அவர் கையொப்பமிட்டுத் தந்திருப்பதிலே "டி.எஸ்.எஸ்.எல்.சி." என்றுதான் அவரே குறிப்பிட்டிருக்கிறார், ஆகவே அச்சுப் பிழையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்ட பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகங்களில் பணியாளர்கள்.

* 171 வினா.—**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகங்களுக்கு, பிற மாவட்டங்களிலுள்ள பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகங்களுக்கு ஒதுக்குவது போன்றே, எழுத்தர் போன்ற பணியாளர்கள் ஒதுக்கப்படுகிறார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அம்மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளே மிகுதியாக இருப்பதை முன்னிட்டு, அதிக எண்ணிக்கையில் எழுத்தர் தேவை என்பதனை அரசு உணர்ந்து நடவடிக்கை எடுக்குமா?

(உ) ஆம் எனில், விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (இ) & (உ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு துவக்கப் பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும் அதிக மிருப்பதால், அம்மாவட்டத்திலுள்ள பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகங் களில், மற்ற மாவட்டத்திலுள்ள பள்ளித்துணை ஆய்வாளர் அலுவலகங்களில் உள்ள பணியிடங்களைவிட அதிகமான பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ளன.